

மறைந்த புதுக்கோட்டை மாவட்ட கழகத்தின் மூத்த முன்னோடி கழக தீர்மானக் குழு உறுப்பினர் மிசா சி.ராமநாதன் அவர்களின் மறைவையொட்டி அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் சி.ராமநாதன் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் திருச்சி சிவா எம்.பி, அமைச்சர், எஸ்.ரகுபதி, அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.திருநாவுக்கரசர், துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, எஸ்.டி.ராமச்சந்திரன், மாநில வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், த.சந்திரசேகரன், பரணி இ.ஏ.கார்த்திகேயன் பலர் பங்கேற்றனர்.



மாவட்ட மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர் பொள்ளாச்சி கார்த்திக் ஏற்பாட்டில் அ.தி.மு.கவைச் சேர்ந்த மாணிக்கம், அ.தி.மு.க 6 வது வட்ட துணைச் செயலாளர் கண்மனி, பொள்ளாச்சி பாஜக பொறியாளர் அணி செல்வம், அருண் அ.தி.மு.க. வார்டு செயலாளர் நடராஜ், , சரவணன், மாக்கினாம்பட்டி சரவணன் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்டோர் மண்டல பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, கழக மாணவரணி செயலாளர் வழக்கறிஞர் இரா. ராஜீவ்காந்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் தமிழ்மறை, பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் மகாலிங்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில்

# திருத்துறைபூண்டியில் செம்மொழிநாள் கூட்டம்: எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் சிறப்புரை!

### பூண்டி.கே.கலைவாணன்- ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

திருவாரூர், ஜூன் 23. மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் செம்மொழி நாள் சிறப்புபொதுக்கூட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியில் நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களின் தலைமையில் நடைபெற்றது.தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ். விஜயன், தட்கோ தலைவர் நா.இளையராஜா உள்ளிட்டோர் முன்னிலை ஏற்று உரையாற்றினார்.

திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியின் செம்மொழி நாள் சிறப்பு பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமை ஏற்றார். நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ்.விஜயன், தட்கோ தலைவர் நா. இளைய ராஜா,மாவட்ட துணை செயலாளர்கள் எம்.கார்த்திக்,தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன் ,ஒன்றிய செயலாளர்கள் பால.ஞானவேல்,வி.எஸ். ஆர்.தேவதாஸ், இரா. மனோகரன், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், முன்னாள் ஒன்றிய செயலாளர் முகில் இராஜேந்திரன், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிக்கந்தர், முன்னாள் கூட்டுறவு சங்க ஆர். எஸ்.சுந்தர்,நகர்மன்ற முன்னாள் தலைவர் ஆர்.மணி மாறன்,இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.வினோத் குமார்,எம்.பி.எடிசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

திரைப்பட நடிகர் தலைமை கழக பேச்சாளர் எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் செளமியன் வைத்யநாதன்,மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு பங்கேற்று சிறப்புரை யாற்றினர் .

கூட்டத்தில் மாவட்ட ,ஒன்றிய ,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர். நகர இளைஞர் அணி அமைப்பாளர் கோ.வசந்த் என்கிற முருகவேல் நன்றி கூறினார்.



ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், சின்ன புலியூர் ஊராட்சி, தளவாய் பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, முன்னாள் அமைச்சரும், ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளருமான தோப்பு என்.டி.வெங்கடாசலம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தஞ்சை தொகுதிக்கு உட்பட்ட கரந்தை பி.மணிவண்ணன், கீரைக்காரத்தெரு வி.சரவணன், வாணியத் தெரு வி.கோவிந்தராஜ் ஆகிய மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ3,03,000/ மதிப்பீட்டில் மூன்று சக்கர மோட்டார் பொருத்திய பெட்ரோல் வாகனத்தை வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் ஆர்.கே. நீலகண்டன், மண்டல குழு தலைவர் ஜி.கலையரசன், மாமன்ற உறுப்பினர்கள் உஷா, சுகந்தா, அண்ணா. பிரகாஷ், பெரியசாமி, பி.தர்மராஜன், ஞானம் நகர் பாஸ்கர், புதுப்பட்டிணம் சண்முகம் மற்றும் மாற்றுத்திறனாளி நல அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத் தேர்தலில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.ஆர். கே.பாலு அவர்கள் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியப் பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், எஸ்.ஆர்.கே.பாலு அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்; திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஜூன் 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு க.தங்கராஜ் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு, திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக, திரு. **க.தங்கராஜ்**, மார்க்கண்டாபுரம், கூத்தம்பூண்டி ஊராட்சி, ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - 624 616. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **துரைமுருகன்** |
| சென்னை - 18, | பொதுச் செயலாளர் |
| நாள் : 21.6.2025 | தி.மு.க. |

## கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

# பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் வேட்புமனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.ஜெயராமன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், அப்பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 23 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **துரைமுருகன்** |
| சென்னை - 18, | பொதுச் செயலாளர் |
| நாள் : 21.6.2025 | தி.மு.க. |

### ஒன்றிய இளைஞர் அணி சார்பில்

# ஆலத்தூர் - குரூர் கிராமத்தில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்!

### வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. – எசனை ஆறுமுகம் – சிந்துமதி ராஜா பங்கேற்பு!

பெரம்பலூர், ஜீன்,23

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், குரூர் கிராமத்தில், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பி.ரோகிலன் தலைமையில், ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ. வல்லபன் முன்னிலையில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமை கழக பேச்சாளர் எசனை ஆறுமுகம், கழக இளம் பேச்சாளர் சிந்துமதிராஜா ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி சிறப்புரையாற்றினார்கள்.

இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், ஆர்.அருண், டிஆர்.சிவசங்கர், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ், மாவட்ட பிரதிநிதிகள் சந்திரமோகன், பாஞ்சாலை உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் மத்திய மாவட்டம்

# திருவள்ளூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்டம், திருவள்ளூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **முரளி கிருஷ்ணன்**, (திருவள்ளூர் வடக்கு ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்) அவர்கள் திருவள்ளூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **துரைமுருகன்** |
| சென்னை - 18, | பொதுச் செயலாளர் |
| நாள் : 21.6.2025 | தி.மு.க. |

## தி.மு.க. விவசாய அணி மற்றும் வர்த்தகர் அணி

# துணைச் செயலாளர்கள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

**தி.மு.க. விவசாய அணி துணைச் செயலாளராக வெப்படை ஜி.செல்வராஜ்**, (பள்ளிபாளையம், நாமக்கல் மேற்கு மாவட்டம்) அவர்களும்;

**தி.மு.க. வர்த்தகர் அணி துணைச் செயலாளராக பி.டி. அன்பரசன்**, எம்.எஸ்சி., எம்.எட்., (கட்டிக்கணாப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்களும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட அந்தந்த அணிகளின் மாநில நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **துரைமுருகன்** |
| சென்னை - 18, | பொதுச் செயலாளர் |
| நாள் : 21.6.2025 | தி.மு.க. |

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நாமக்கல் மேற்கு மாவட்டத் தேர்தலில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.நடேசன் அவர்கள் திருச்செங்கோடு மேற்கு நகரக் கழக பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், ஆர்.நடேசன் அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்; நாமக்கல் மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஜூன் 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். ""என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

**நாமக்கல் மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு எஸ்.ஜிஜேந்திரன்** அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு, நாமக்கல் மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக, திரு. எஸ். ஜிஜேந்திரன், 7/41, ராயர்பாளையம் அஞ்சல், 85. கவுண்டம்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் - 637 205. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **துரைமுருகன்** |
| சென்னை - 18, | பொதுச் செயலாளர் |
| நாள் : 21.6.2025 | தி.மு.க. |

## நீலகிரி மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தலில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எம். ராஜு அவர்கள் மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும், திரு.முஸ்தபா அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாலும் , 2 (இரண்டு) தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால்;

பொதுக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஷீலாகேத்ரின் அவர்கள் மறைவெய்திய காரணத்தாலும் - திரு.க. ராஜா (எ) ராஜகுமார் மற்றும் மா.தொரை ஆகியோர் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டதாலும், 3 (மூன்று) பொதுக்குழு உறுப்பினர்கள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால், மேற்சொன்ன பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 25 (புதன்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் நீலகிரி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **துரைமுருகன்** |
| சென்னை - 18, | பொதுச் செயலாளர் |
| நாள் : 21.6.2025 | தி.மு.க. |

## நீலகிரி மாவட்டம்

# கூடலூர் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் லியாகத் அலி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **திரு.கி.உத்தமன்** (7/92, உதகை சாலை, மசினகுடி, நீலகிரி மாவட்டம்) அவர்கள் கூடலூர் ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **துரைமுருகன்** |
| சென்னை - 18, | பொதுச் செயலாளர் |
| நாள் : 21.6.2025 | தி.மு.க. |



ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் கோபியில் உள்ள வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் கோபி கே.எம்.தண்டபாணி, அந்தியூர் காசி ஆகியோர் கலந்து கொண்டு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் கழக நிர்வாகிகள் தேர்தல் களப்பணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள்,சார்பு அணி அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.